# குளித்தலை நகராட்சி

31.03.2020.ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களின் மார்ச்–2020.ஆம் மாத(09.03.2020 முதல் 31.03.2020வரை) தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) திரு.ந.புகழேந்தி அவர்களின் பிப்ரவரி–2020 மற்றும் மார்ச்–2020.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி அரசு பொது மருத்துவமனை பின்புறம் உள்ள கழிவுநீர் வடிகால்கள் தூர்வாரும் பணி செய்தல் பணிக்கு, அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் ஒப்பந்ததாரர் திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை மூலம், மதிப்பீட்டிலான விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன்படியான பட்டியல் தொகை ரூ.4,52,535/– (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்திரெண்டு ஆயிரத்து ஐநூற்று முப்பத்து ஐந்து மட்டும்) ஒப்பந்ததாரருக்கு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2446/2019/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சிப் பகுதிகளில் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருள்கள் தடை செய்யப்பட்டது தொடர்பான கலந்தாய்வு கூட்டம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நடைபெற்றது. அதற்குரிய பிளக்ஸ் பேனர், மைக்செட், ஸ்பீக்கர் செட், பவர் பாயின்ட், ஒளித்திரை மற்றும்சிறப்பு விருந்தினர்களுக்கு கவுரப்படுத்துதுல் இக்கூட்டத்திற்கு வருகை புரிந்தோர்களுக்கு டீ, காபி மற்றும் நோட்டிஸ் போன்றவைக்கு செலவினம் அவசர அவசியம் கருதி, திரு.கா.இஸ்மாயில், துப்புரவு ஆய்வாளர் மூலம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | செலவினத் தொகை | |
|---|---|---|---|
| 1) | ராம் கம்ப்யூட்டர்ஸ், பெரியபாலம், குளித்தலை. | ரூ. | 5500.00 |
| 2) | ராஜாளி ஹோட்டல், சுங்கவாயில், குளித்தலை. | ரூ. | 3250.00 |
| 3) | அம்மன் சவுண்ட் சர்வீஸ், ஆர்.எஸ்.ரோடு, குளித்தலை. | ரூ. | 9500.00 |
| 4) | தாரணி ப்ளக்ஸ் பிரிண்டிங், பேருந்து நிலையம், குளித்தலை. | ரூ. | 13260.00 |
| | மொத்தம் | ரூ. | 31510.00 |

மேற்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் பட்டியல் தொகை மொத்தம் ரூ.31510.00–யை, தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் அன்னாருக்கு வழங்கப்பட்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.436/2019/எச்1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகளுக்கான சாலை துண்டிப்புக் கட்டணம், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/2008/குவ2, நாள்– 21.09.2009.ன்படி 2020–2021.ம் ஆண்டிற்கு 5% உயர்த்தவேண்டி உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிதியாண்டு | சாலையின் நீளம் | தார்சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|---|
| 1) | 2019–2020 | 0.30 மீ | ரூ.3666.00 | ரூ.4234.00 |
| 2) | 2020–2021 | 0.30 மீ | ரூ.3849.00 | ரூ.4446.00 |

வரிசை எண்.2.ன்படி விகிதத்தில் மாற்றம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1153/2018/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5109 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.70,000/– மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பழுது பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.366/2020/எச்1)

பொருள்– 07. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு டயர் மற்றும் டியூப், அங்கீகாரம் பெற்ற டீலர்களிடமிருந்து வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.358/2020/எச்1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி மணத்தட்டை வார்டு எண்.2, வார்டு எண்.18, கந்தசாமிபிள்ளைதெரு, வார்டு எண்.18, காவல்காரதெரு பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் பணிக்கு 2019–2020 குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்துள்ள பணிகளுக்குரிய மதிப்பீட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/3142/2019, நாள்–04.03.2020.ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.316/2020/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சியின் ஆணையர் முகாம் அலுவலகத்திற்கு ஏசி மெசின், பர்னிச்சர் சாமான்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருள்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சம் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.401/2020/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு வாகனங்களுக்கு சாலைவரி 2020–2021.ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட விபரப்படி தொகை ரூ.29129/–யை, வட்டார போக்குவரத்து கழகம், குளித்தலை அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வண்டி எண் | சாலை வரி |
|---|---|---|
| 1) | TN-47-E-0264 | 4555.00 |
| 2) | TN-47-X-0031 | 7282.00 |
| 3) | TN-47-AS-5370 | 4252.00 |
| 4) | TN-47-F-1522 | 3040.00 |
| 5) | TN-47-AY-6449 | 10000.00 |
| | TOTAL | 29129.00 |

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). TN-47-E-0264 குடிநீர் வாகனத்திற்கு ரூ.4555.00 குடிநீர் நிதியிலிருந்தும், எஞ்சிய ரூ.24574/–ஐ, பொது நிதியிலிருந்தும் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.415/2020/எச்1)

..3..

பொருள்– 11. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.இரா.மோகன்குமார் அவர்கள் அலுவலக பணி நிமித்தமாக கீழ்க்கண்ட விபரப்படி வெளியூர் சென்று வந்தமைக்கு பயணப்படி தொகை ரூ.3230/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பயண தேதி | பயண ஊர் | பயணத்தின் காரணம் | பயணபட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | 18.03.2020 மற்றும் 19.03.2020 | சென்னை | SBM Meeting, CMA Office, Chennai. | ரூ.3230.00 |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1252/2019/அ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி எல்லைக்குள் வைகைநல்லூர் கிராமம் சர்வே எண்.75/2 மற்றும் 76/3, 6, 7, 8.ல் கட்டுப்பட்ட 5.255.ஐ, திரு.வி.சின்னையன் என்பவருக்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.4371/2018/திம2, நாள்–26.11.2019.ல், ம.வி(வ)/ந.ஊ.உ.இ.தி(ம) எண்.420/2019.ல் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. வரன்படுத்தப்பட்ட இம்மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு தான செட்டில்மென்ட் வழங்க, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.4371/2018/திம2, நாள்–14.02.2020.ல் தெரிவித்துள்ளார்கள். எனவே, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு தானசெட்டில்மென்ட் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி சாலை மற்றும் பூங்கா இடத்தை பத்திரம் பதிவு செய்து நகராட்சிவசம் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2667/2019/பி2)

பொருள்– 13. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான பொருட்கள், அரசாணை(நிலை) எண்.118.ல் நாள்–26.09.2014.ல் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மேலும் அரசாணை(ப) எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.1) துறை, நாள்–17.01.2013.ல் தெரிவித்துள்ளதாலும், கீழ்க்கண்ட விபரப்படி 2020–2021.ம் ஆண்டுக்குரிய (01.04.2020 முதல் 31.03.2021) வரை பொருட்கள் வாங்கி அம்மா உணவகத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.60.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

| உணவு பொருட்கள் மற்றும் சப்ளைசெய்யும் நிறுவனம் விபரம் | | | |
|---|---|---|---|
| 1) | அரிசி | = | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிட்டங்கி, அய்யர்மலை |
| 2) | மளிகை பொருட்கள் | = | கரூர் மாவட்ட மொத்த கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலை YH.159, கரூர். |
| 3) | எரிவாயு உருளைகள் | = | ஸ்ரீமூகாம்பிகை கேஸ் ஏஜென்சீஸ், குளித்தலை. |
| 4) | பால் விநியோகம் | = | திருமதி.ஜி.யுவராணி, 39/50, பழையகோர்ட்தெரு, குளித்தலை. |
| 5) | காய்கள் விநியோகம் | = | திருமதி.ஜி.யுவராணி, 39/50, பழையகோர்ட்தெரு, குளித்தலை. |
| 6) | அம்மா உணவகத்தில் பணிபுரியும் ''ஸ்ரீசாய்ராம் மகளிர் சுயஉதவி குழு'' பணியாளர்களின் மாத ஊதியம் | | |
| 7) | மின்கட்டணம் மற்றும் பொருட்கள் ஏற்றிவரும் வண்டி வாடகை மற்றும் இதர செலவினங்கள் (J.பிரபாகரன், TN-48-R-5640) | | |
| 8) | உணவு விநியோகம் செய்ய டோக்கன்கள் அச்சடித்தல். தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், திருச்சிராப்பள்ளி. | | |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). மேற்படி செலவினம் மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று, செலவின தொகை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). மேற்படி உத்தேச செலவினம் ரூ.60.00 லட்சம் பொது நிதியின்கீழ் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1083/2014/டி2)

*******

# <u>குளித்தலை நகராட்சி</u>

31.03.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 240 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 2 | 2 | 241 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 3 | 3 | 242 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 4 | 4 | 243 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 244 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 6 | 6 | 245 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 246 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 247 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 9 | 9 | 248 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 10 | 10 | 249 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 250 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 251 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 252 | ஏற்கப்பட்டது. |

ஒம்/—இரா.மோகன்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.